### இந்திய ரயில்வேயில்

# கடுமையான பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது!

## மக்களவையில் கனிமொழி கருணாநிதியின் கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் பதிலில் ஒப்புதல்!

புதுடெல்லி, ஆக.6-

ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி எம்பி, மற்றும் எம்.செல்வராஜ், கௌசலேந்திர குமார், நடராஜன், ஹிபி ஈடன் ஆகிய எம்.பி.க்கள் எழுத்துப்பூர்வமாக கேள்விகளை எழுப்பியிருந்தனர்.



"இந்திய ரயில்வேயில் நிலவும் கடுமையான பணியாளர் பற்றாக்குறை பற்றி ரயில்வே நிர்வாகம் அறிந்திருக்கிறதா?

ரயில்வேயின் 18 மண்டலங்களிலும் பல்வேறு கெசட்டடு ஆபீசர்ஸ் மற்றும் 3.12 லட்சத்துக்கும் மேற்பட்ட நான் கெசட்டடு பணியிடங்கள் காலியாக இருக்கிறது. ஒவ்வொரு மண்டலம், கோட்டம் வாரியாக காலி பணியிடங்களின் எண்ணிக்கை என்ன?

இந்த காலிப் பணியிடங்களை நிரப்ப ரயில்வே நிர்வாகம் ஏதும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா? காலி பணியிடங்களை நிரப்புவதற்கு ரயில்வே நிர்வாகம் ஏதும் கால வரம்பு நிர்ணயித்திருக்கிறதா? ஆட்சேர்ப்பு செயல்முறையை விரைவுபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

**16 மணி நேர வேலை!**

பணியிடங்களை நிரப்பாததால் தற்போது பணியில் இருக்கும் ஊழியர்கள் ஓய்வு இல்லாமல், உணவும் உட்கொள்ளாமல் 16 மணி நேரம் வரை பணி செய்யும் கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறார்களா? இதன் உண்மை விவரங்கள் என்ன?

ரயில்வே துறையில் ஒப்பந்தப் பணியாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு, மண்டலம், கோட்டம் வாரியாக என்ன?

ஒப்பந்தப் பணியாளர்களோடு ஒப்பிடும்போது நிரந்தர பணியாளர்கள் அதிக பொறுப்புடையவர்கள் ஆகிறார்களா? இந்த ஒப்பீடு ரயில்வேதுறையின் செயல் திறனை பாதிக்கிறதா? இதன் விவரங்கள் என்ன?" என்ற கேள்விகளை எழுத்துப்பூர்வமாக கேட்டிருந்தார்கள்.

**அமைச்சர் பதில்!**

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இந்திய ரயில்வேயில் மண்டல வாரியாக நிலவும் பணியாளர் பற்றாக்குறை எண்ணிக்கை பற்றி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். அது வருமாறு:

அதன்படி இந்திய ரயில்வேயில் அனைத்து மண்டலங்களையும் சேர்த்து கெசட்டடு ஆபீசர்ஸ் பணியிடங்கள் 2,680 காலியாக இருக்கின்றன. நான் கெசட்டடு பணியாளர்கள் பணியிடங்கள் 2 லட்சத்து 61 ஆயிரத்து 233 காலியாக உள்ளது.

குறிப்பாக தென்னக ரயில்வேயில் 120 கெசட்டடு ஆபீசர்ஸ் பணியிடங்களும், 15 ஆயிரத்து 240 நான் கெசட்டடு பணியிடங்களும் காலியாக இருக்கின்றன.

இவை தவிர ரயில்வேயின் பாதுகாப்பு செயல்பாட்டுத் துறையில் 53 ஆயிரத்து 178 இடங்கள் காலியாக இருக்கின்றன.

உலகின் மிகப்பெரிய நிறுவனமான இந்திய ரயில்வேயில் காலியிடங்கள் ஏற்படுவதும் அதை நிரப்புவதும் தொடர் நடவடிக்கையாக உள்ளன. குறிப்பாக செயல்பாட்டுத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன. ரயில்வே வேலைவாய்ப்பு முகமைகள் மூலம் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

ரயில்வேயில் குரூப் 'ஏ' சேவைகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு ஒன்றிய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தால் (UPSC) செய்யப்படுகிறது.

அண்மையில் இந்திய ரயில்வேக்கான மிகப்பெரிய ஆட்சேர்ப்புப் பயிற்சி நிறைவடைந்துள்ளது. 2.37 கோடி விண்ணப்பதாரர்களில் இருந்து கணினி அடிப்படையிலான தேர்வு மூலம் 1,39,050 பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

தொழில்நுட்பம் அல்லாத பிரிவுகளுக்கான பணியிடங்களுக்காக மையப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு அறிவிக்கை 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, அதன்படி கணினி வழியிலான தேர்வு 1.26 கோடி பேர்களுக்கு நடத்தப்பட்டது. இத்தேர்வு நாட்டின் 211 நகரங்களில் 726 மையங்களில் 15 மொழிகளில் நடைபெற்றது.

மேலும் ரயில்வே தேர்வுக் கழகம் மூலமாக லெவல் 1 பிரிவுக்கான கணினி வழித் தேர்வு 1.11 கோடி விண்ணப்பதாரர்களுக்கு நாடு முழுதும் 191 நகரங்களில் 551 மையங்களில் 15 மொழிகளில் நடத்தப்பட்டது.

2022 ஏப்ரல் 1 முதல் 2023 ஜூன் 30 வரை 'சி' பிரிவு பணியிடங்களுக்கு ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 773 விண்ணப்பதாரர்கள் 'சி' பிரிவு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 728 பேர் பாதுகாப்புப் பிரிவு பணிக்கானவர்கள்.

எர்ணாகுளத்தில் அமைந்துள்ள திருவனந்தபுரம் கோட்டம் உள்ளிட்ட தென்னக ரயில்வேயில் காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3361 பேர் தென்னக ரயில்வேயில் சி பிரிவு பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.8514 பேர் லெவல் 1 பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு ரயில்வேயில் ஏற்படும் காலி பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமாகவோ, பதவி உயர்வு மூலமாகவோ தொடர்ந்து நிரப்பப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் காலி பணியிடங்களால் மற்ற பணியாளர்கள் 16 மணி நேரம் உணவு, ஓய்வின்றி பணி செய்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லை.

2022 ஆம் ஆண்டு அனைத்து மண்டலங்களையும் சேர்த்து 8 ஆயிரத்து 362 பேர் ஒப்பந்தப் பணியாளர்களாக இருக்கிறார்கள்.

இந்திய ரயில்வேயில் நிரந்தர ஊழியர்கள் மூலமும், ஒப்பந்த ஊழியர்கள் மூலமும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முக்கியத்துவம் மிகுந்த பணிகளில் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்தப்படுவதில்லை. மேலும் இவர்களை கண்காணிக்க மேற்பார்வையாளர்களும் இருக்கிறார்கள்" என்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

---

### ராகுல்காந்தியின் மீதான வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

# பா.ஜ.வின் சதி முற்றிலும் அம்பலமாகியுள்ளது!

## 'தினகரன்' தலையங்கம் விமர்சனம்!

சென்னை, ஆக. 6-

ராகுல்காந்தியின் மீதான அவதூறு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் பா.ஜ.வின் சதி முற்றிலும் அம்பலமாகியுள்ளது என்றும் நீதித்துறையின் மீதான வலிமை நம்பிக்கை உறுதிபடுத்தியுள்ளது. உண்மை என்றும் வெல்லும் என 'தினகரன்' நாளேடு தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அகில இந்திய தலைவரான ராகுல்காந்தி கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது நாடு முழுவதும் அனல் பறக்கும் பிரச்சாரம் மேற்கொண்டார். அந்த சமயத்தில், கர்நாடக மாநிலம் கோலாரில் நடந்த காங்கிரஸ் கட்சி பொதுக் கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் மோடியை கடுமையாக சாடினார். நிதி மோசடியில் ஈடுபட்டு நாட்டை விட்டு தப்பி ஓடிய நீரவ் மோடி, லலித் மோடி ஆகியோருடன் பிரதமர் மோடியையும் ஒப்பிட்டு அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

ராகுல் காந்தியின் இந்த பேச்சு, குறிப்பிட்ட சமூகத்தை அவமதிப்பதாக கூறி, குஜராத் மாநிலம் சூரத் மாவட்ட தலைமை மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் பா.ஜ. எம்.எல்.ஏ. பூர்னேஷ்மோடி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கின் விசாரணை 4 ஆண்டுகளாக நடந்து வந்த நிலையில், கடந்த ஏப்ரல் 23ம் தேதி தீர்ப்பு கூறப்பட்டது. ராகுல்காந்தி குற்றவாளி என நீதிபதி எச்.எச்.வர்மா தீர்ப்பளித்தார். அத்துடன்,



தினகரன்

ஆகஸ்ட் 5, 2023 சனிக்கிழமை

ஜனநாயகம் வென்றது

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அகில இந்திய தலைவரான ராகுல்காந்தி கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது நாடு முழுவதும் அனல் பறக்கும் பிரசாரம் மேற்கொண்டார். அந்த சமயத்தில், கர்நாடக மாநிலம் கோலாரில் நடந்த காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் மோடியை கடுமையாக சாடினார். நிதி மோசடியில் ஈடுபட்டு நாட்டைவிட்டு தப்பி ஓடிய நீரவ் மோடி, லலித் மோடி ஆகியோருடன் பிரதமர் மோடியையும் ஒப்பிட்டு அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

ராகுல் காந்தியின் இந்த பேச்சு, குறிப்பிட்ட சமூகத்தை அவமதிப்பதாக கூறி, குஜராத் மாநிலம் சூரத் மாவட்ட தலைமை மாஜிஸ்திரேட் ...

அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தார். எனினும், தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஏதுவாக ஜாமீன் வழங்கியதோடு தண்டனையை ஒரு மாத காலத்திற்கு நிறுத்திவைத்தார்.

தீர்ப்பு கூறப்பட்ட மறுநாளே ராகுல்காந்தியின் எம்.பி. பதவியை லோக்சபா செயலகம் பறித்தது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி ஒரு எம்.பி. அல்லது எம்.எல்.ஏ இரண்டு ஆண்டு அல்லது அதற்கு மேலாக சிறை தண்டனை பெற்றால் அவரது மக்கள் பிரதிநிதி பொறுப்பு பறிக்கப்படும். இந்த விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக லோக்சபா செயலகம் அறிவித்தது. ராகுல்காந்தி, தகுதி நீக்கம் செய்யப்பட்டதால், 8 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாத நிலையும் உருவானது. ராகுல்காந்திக்கு தண்டனை நிறுத்திவைக்கப்பட்டால் மட்டுமே, வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலை உள்ளது.

இதனால், ராகுல் காந்தி தண்டனையை எதிர்த்து, குஜராத் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். சூரத் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை நிறுத்தி வைக்கவேண்டும் என்ற ராகுல்காந்தியின் கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த வழக்கு நேற்று நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.எஸ். நரசிம்ஹா மற்றும் சஞ்சய்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு இடைக்கால தடை விதித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு, காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பா.ஜ.வின் சூழ்ச்சி முறியடிக்க ப்பட்டதாக காங்கிரஸ் தொண்டர்கள் கோஷம் எழுப்பினர்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில், "ராகுல்காந்தி வழக்கில் நீதி வென்றது. ராகுல் காந்தியை வயநாடு தக்கவைக்கிறது. குற்றவியல் அவதூறு வழக்கில், ராகுல் காந்திக்கு எதிரான தண்டனையை நிறுத்திவைத்துள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்கிறேன். உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு, நமது நீதித்துறையின் வலிமை மற்றும் ஜனநாயக விழுமியங்கள் மீதான நமது நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது" என பதிவிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறுகையில், "பா.ஜ.வின் சதி முற்றிலும் அம்பலமாகியுள்ளது. இந்திய அரசியலமைப்பு நிலைநாட்டப்பட்டுள்ளது. உண்மை மட்டுமே வெல்லும். நீதி, ஜனநாயகம், சத்தியம் வென்றுள்ளது" என்றார். உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு மூலம், ராகுல் காந்தியின் அரசியல் பயணம் தொடரவும், நாடாளுமன்ற தேர்தலில் அவர் போட்டியிடவும் இனி தடை ஏதும் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலை! கே.இ.செந்தமிழ் அரசு தலைமை!

# பெரம்பூர் வடக்குப் பகுதி 37வது வட்டத்தில் குத்துச்சண்டை போட்டி!

## ஆர்.எஸ்.பாரதி பரிசு வழங்குகிறார்! தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஆக.6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி 37-வது வட்டத்தில் நடைபெறும் குத்துச்சண்டை போட்டி, அதைத் தொடர்ந்து பரிசுகள் வழங்கும் விழா இன்று (6.8.2023, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலையிலும், கே.இ.செந்தமிழ் அரசு தலைமையிலும் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கலந்துகொண்டு பரிசுகளை வழங்குகிறார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் பெரம்பூர் வடக்குப் பகுதி செயலாளர் அ.முருகன், தெற்குப் பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

### திருப்பத்தூர் மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5 ம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஆக. 6-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கி கொண்ட முத்தமிழ் அறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாவது நினைவு நாளினையொட்டி

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் அமைதிப் பேரணி நாளை (ஆகஸ்ட் 7 திங்கட்கிழமை) காலை 9 மணி அளவில் திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி முதல் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை வரை சென்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.



அது சமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# மயிலை மேற்குப் பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி வேண்டுகோள்!

சென்னை, ஆக. 6-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி ஆலோசனை கூட்டம் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் இன்று (6.08.2023) காலை 10.00 மணிக்கு அவை தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் பகுதி கழக துணை செயலாளர்கள் ஆர்.எல்.வி. அசோக் குமார், ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது

பொருள்: முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.விகணேசன் ஆகியோர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில் நுட்ப மையத்தினை திறந்து வைத்தனர். இதில் மண்டலத்தலைவர்கள் இல.பத்மநாபன், கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மண்டல பயிற்சி இணை இயக்குநர் முஸ்தபா, திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி முதல்வர் பிரபு, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தியாகராஜன், உதவி செயற்பொறியாளர் முத்துசரவணன் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### பெரியகுளம் அருகே

# மாஸ்க் தொழிற்சாலையில் தீ!

பெரியகுளம், ஆக.6-

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ள லட்சுமிபுரத்தில் நாப்கின் மற்றும் முகக் கவசம் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென தீப்பிடித்து தொழிற்சாலை முழுவதும் தீ பரவியது.

தகவலறிந்து வந்த தேனி மற்றும் பெரியகுளம் தீயணைப்புத்துறை வீரர்கள் நீண்டநேரம் போராடி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் போடியில் இருந்தும் தீயணைப்பு நிலைய வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். தனியார் டேங்கர் லாரிகளில் நீர் வரவழைக்கப்பட்டு 30க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தொழிற்சாலையில் பரவிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 8 மணிநேரம் போராடி தீயை அணைத்தனர். தீ தொழிற்சாலை முழுவதும் பரவியதால், அங்கு வைக்கப்பட்டிருந்த மூலப்பொருட்கள் பஞ்சு மற்றும் தயார் செய்து வைக்கப்பட்ட நாப்கின், முகக் கவசங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் எரிந்து நாசமாகின.

இவற்றின் மதிப்பு ரூ.3 கோடி என கூறப்படுகிறது. தீப் பற்றியவுடன் பெண் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. மின்கசிவு காரணமாக தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பெரியகுளம் தென்கரை போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ஏ.வி. பதி

### ஆகஸ்ட் 6 (1996)



தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**